எம்.சி.ஓ.பி எண்: 1510/2024 தேதி: 17.03.2026

மசா. : 1

பெயர் : ரெஜினாமேரி

க /பெ. : எழில் ராஜன்

வயது : 39

**<u>சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>மசாஆ 1 மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு கூடுதல் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்து ஆவணம் குறியீடு செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக கூடுதல் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 28 மட்டும் தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2ம் எதிர்மனுதார் சாட்சி அளித்த பிறகு அது எனக்கு பாதகமாக இருப்பதால் மசாஆ 28 வழக்கிற்காக இழப்பீடு பெறும் நோக்கத்தில் தயாரித்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மசாஆ 28 பதிவு செய்யப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறேன். அது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மசாஆ 28ல் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமான காசோலை உட்பட வங்கி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வருமான வரி தற்பொழுது நான் செலுத்தவில்லை. வருமான வரி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் தொடர்ந்து ராயல் எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன் என்பதாலும் அந்த நிறுவனத்தை வேறு ஒருவருக்கு விற்று விட்டதாக இந்த வழக்கிற்காக இழப்பீடு பெறுவதற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தொடர்ந்து இந்த நிறுவனத்தை நடத்தி வருகிறேன் என்றாலும் அந்த நிறுவனம் சம்பந்தமாக அனைத்து ஆவணங்கள் தற்பொது என் பெயரில் நடைமுறையில் உள்ளது என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.